## கோலாலம்பூர் மாநகர மன்றத்திற்குட்பட்ட

# எல்லா பொது வீடமைப்புகளிலும் தீயணைப்பு பாதுகாப்பு பணிக்குழு



கோலாலம்பூர், பிப். 23-

கோலாலம்பூர் மாநகர மன்றத்திற்கு உட்பட்ட பொது வீடமைப்புத் திட்டங்களில் அதன் தீயணைப்பு பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆராய பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக கோலாலம்பூர் தீயணைப்பு மீட்பு இலாகாவின் இயக்குநர் முகமட் சாலே அப்துல் கூறினார்.

மாநகர வட்டாரத்தில் உள்ள 24 வீடமைப்புத் திட்டங்களில் 122 புளோக் கட்டடங்களை அதிகாரிகள் ஆராய்வார்கள். இவை 30 ஆண்டுகளுக்கும் மேல் பழைமையானவை. மாநகர மன்ற அதிகாரிகளோடு தீயணைப்பு இலாகாவைச் சேர்ந்த 70 அதிகாரிகளும் இந்த குழுவில் இடம் பெறுவர்.

இம்மாதம் இறுதி வரை இந்த சோதனைகள் நடைபெறும் என்று நேற்று ஸ்ரீ சபா அடுக்குமாடியில் இந்த பணிக்குழுவை தொடக்கி வைத்தப் பிறகு அவர் பேசினார்.

கடந்த பிப்ரவரி 11 ஆம் தேதி ஸ்ரீ சபா அடுக்குமாடியில் ஏற்பட்ட தீ விபத்துக்கு பின்னர் இந்த பணிக்குழுவை அமைப்பது குறித்து முடிவு செய்யப்பட்டது என்றார் அவர்.

ஒவ்வொரு வீடமைப்பு கட்டடத்திலும் பாதுகாப்பு அம்சங்கள் உறுதி செய்யப்பட வேண்டும். தற்போதைய சட்டத்தின் கீழ் என்னென்ன மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் ஆராய்வோம் என்றார் அவர்.

ஓர் அவசர சம்பவம் நடந்து விட்டால் தீயணைப்பு இலாகா மற்றும் அந்த கட்டடத்தில் குடியிருக்கும் மக்கள் அவசரமாக என்ன செய்ய வேண்டும் என்பது வலியுறுத்தப்படும் என்றார் அவர்.

மொத்தம் 122 புளோக் பொது வீடமைப்பு கட்டடங்கள் 4 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு அவற்றின் தீயணைப்பு பாதுகாப்பு தொடர்ந்து சோதிக்கப்படும். செராஸ், ஸ்தாப்பாக் மற்றும் கிரிஞ்சி ஆகிய பகுதிகள் முதலில் சோதிக்கப்படும் என்றார் அவர்.